A

# அறிவித்தல்

"தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் மற்றும் மதுசாரம் அதிகாரசபை" எனும் சட்டமூலம் சம்பந்தமான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

அரசியலமைப்பின் 122 (1) (ஆ) ஆம் உறுப்புரையின் பிரகாரம் தேசிய நலனைக் கருதி அவசரமானது என அமைச்சரவையினால் சான்றுப்படுத்தப்பட்ட இச் சட்டமூலம் விசேட தீர்ப்புக்காக மேதகு சனாதிபதி அவர்களால் உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

அரசியலமைப்பின் 123 ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றமானது, உயர் நீதிமன்ற தீர்ப்பில் குறித்துரைக்கப்பட்ட திருத்தங்களை மேற்கொள்ளுமிடத்து இச் சட்டமூலத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்பிற்கு முரணானது அல்லவென்று தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிடுதல் வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.